செ.வெ.எண். 22/ஜூன் தேதி : 08.06.2016

**பத்திரிகைச் செய்தி**

# பட்டதாரி, பட்டய தொழில் கல்வி படித்த தொழில் முனைவோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்!

**புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம்**

தமிழக அரசின் முதல் தலைமுறை பட்டதாரி, பட்டய தொழில் கல்வி படித்த தொழில் முனைவோருக்காக புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் என்ற சுயதொழில் திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டு அமல்படுத்தப்பட்டுள்ளது. 2016-17 ஆம் ஆண்டில் 19 நபர்களுக்கு ரூ.190.00 இலட்சம் மானியத்துடன் கடன் வழங்க வங்கிகள் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு மாவட்ட தொழில் மையம் மூலமாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**ரூ. 5 லட்சம் முதல் ரூ 1 கோடி வரை கடனுதவி**

இத்திட்டத்தின் கீழ் திட்ட மதிப்பீடு குறைந்த பட்சம் ரூ.5 இலட்சத்திற்கு மேல் அதிகபட்சமாக ரூ.1 கோடி வரை இருக்கலாம். அனைத்து உற்பத்தி மற்றும் சேவை தொழில்கள் தொடங்கலாம். தொழில் முனைவோர் பங்களிப்பாக பொது பிரிவினர் திட்ட முதலீட்டில் 10 சதவீதம் சிறப்பு பிரிவினர் 5 சதவீதம் செலுத்த வேண்டும். வணிக வங்கிகள், தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் கடனுதவி பெற பரிந்துரை செய்யப்படும். திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம் மானியமும் முறையாக கடனை திருப்பி செலுத்தினால் 3 சதவீதம் வட்டி மான்யமும் வழங்கப்படும்.

**தகுதிகள்**

இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க இளநிலை பட்டதாரிகளாகவோ, பட்டயம் பெற்றவராகவோ, ஐடிஐ தொழிற் பயிற்சி பெற்றவர்களாகவோ அல்லது அதற்கு மேற்பட்ட கல்வி தகுதி பெற்றவராகவோ இருக்க வேண்டும். தமிழ் நாட்டில் கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து வசிப்பவராக இருக்க வேண்டும். பொதுப் பிரிவினர் 21 வயது முதல் 35 வயதுக்குட்பட்டவர்களாகவும், சிறப்பு பிரிவினர் அதிகபட்சம் 45 வயதுக்கு உட்பட்டவராகவும் இருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு ஏதும் இல்லை. உரிமையாளர் அல்லது பங்குதாரர் நிறுவனமாக இருக்கலாம். பங்குதாரர் நிறுவனமாக இருப்பின் அனைத்து பங்குதாரர்களும் திட்டத்தின் தகுதிகளுக்குட்பட்டவராக இருக்க வேண்டும்.

2016-17 ஆம் ஆண்டிற்கு தகுதியுள்ள தொழில் முனைவோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பெறப்படும் விண்ணப்பங்கள் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான தேர்வுக்குழுவினரால் நேர்முகத் தேர்வின் மூலம் பரிசீலிக்கப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யப்படுவார்கள். ஆர்வமும் தகுதியும் உள்ள தொழில் முனைவோர் www.msmeonline.tn.gov.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்கும் படியும் உரிய இணைப்புகளுடன் தொழில் மைய அலுவலகத்தில் விண்ணப்பத்தை அளிக்குபடி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.